[2003 ஏப்ரல் 3

167—

கல் மெருகூட்டும் தொழிற்சாலை

***18823—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, குன்னம் கிராமத்தில் மிகவும் தரமான சிறந்த கருப்புக் கல் அதிகமாகக் கிடைப்பதால் அங்கு கல் மெருகூட்டும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) கருப்புக் கல் மெருகூட்டும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வானூர் தொகுதியில் உலகிலேயே மிகச் சிறந்த தரமான கருப்புக் கல் குன்னம் கிராமத்திலேதான் கிடைக்கிறது. இக்கிராமத்தில் மட்டுமல்லாமல், அருகிலிருக்கின்ற பெரும்பாக்கம், கரசானூர், பரங்கனி, எறையூர், பரகுடி போன்ற கிராமங்களில் மிகுதியாக கருப்புக் கல் கிடைக்கிறது. அரசு நிறுவனமான TAMIN மற்றும் சில தனியார் நிறுவனங்கள் அங்கு கிடைக்கும் கருப்புக் கற்களை கருப்பு வைரமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. எனவே அப்பகுதி வேலையில்லா இளைஞர்களுக்கும், அங்குள்ள கல்லுடைக்கும் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கும் — தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அப்பகுதியில் அதிகமாக உள்ளதால் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்—அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மறுபரிசீலனை செய்து கல் மெருகூட்டும் தொழிற்சாலையை அடுத்த ஆண்டிலாவது அரசு அமைக்குமா என அறிய விரும்புகிறேன்.

2003 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் கருப்புக் கல் மெருகூட்டும் தொழிற்சாலை அமைக்க கீழ்க்கண்ட அடிப்படை வசதிகள் அமையப் பெற வேண்டும்:—

அமைக்க உத்தேசிக்கும் தொழிற்சாலையைச் சுற்றி, 50 அல்லது 60 கிலோமீட்டர் வரம்பிற்குள் தரமுள்ள ஏற்றுமதிக்கு உகந்த பல்வேறு வகையான கிரானைட் பாறைகள் அமையப் பெற்றிருக்க வேண்டும்; அப்பகுதியில் எப்போதும் அதிக அளவு தண்ணீர் கிடைக்கப்பெற வேண்டும்; சரியான போக்குவரத்து வசதி கொண்ட ரயில் நிலையத்தையும் தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கின்ற வகையில் தொழிற்சாலை அமையப் பெற வேண்டும்; மேலும், ஒரு பகுதியில் கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலை அமைப்பதற்குமுன் கிரானைட்டைச் சார்ந்த பொருள்களுக்கான சர்வதேசத் தேவையினை நன்கு ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். ஆகவே இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் தொழிற்சாலை அமைக்க முடியும். தற்சமயம் அந்தத் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 168, திரு. ஆர். சாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

168—

துணை மின் நிலையம்

***19521—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில் 110 மெகாவாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி நடப்பாண்டில் துவக்கப்படுமா?

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,